# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

24

1948-ல் கொண்டு வரப்பட்ட இந்திய பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டத்துக்கு எதிராக எஸ். ஜே. வி. செல்வநாயகம் வாக்களித்ததால் - அதுவும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக இருந்து கொண்டு வாக்களித்ததால், கட்சித்தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்துக்கும் அவருக்குமிடையில் கருத்து வேற்றுமை ஏற்பட்டது.

அதனால் 1949-ம் ஆண்டு எஸ்.ஜே.வி செல்வநாயகம் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி தமிழரசுக்கட்சியை உருவாக்கினார். வடக்கு-கிழக்கு பிரதேசத்திற்கு சமஷ்டி (மாநில) ஆட்சி கோரியதால் இக்கட்சி சமஷ்டிக் கட்சி என்று அழைக்கப்பட்டது.

மலையக மக்களின் வாக்குரிமை பறிப்புக்கு எதிராக வாக்களித்தமை - சமஷ்டிக் கோரிக்கையை முன் வைத்தமை ஆகிய இரு அம்சங்களில் எஸ். ஜே. வி செல்வநாயகம் அக்காலகட்டத்தில் இருந்த மற்றைய தமிழ் தலைவர்களிடம் இருந்து வேறுபட்டிருந்தாலும் - ஐரோப்பிய காலனிய ஆட்சியாளர்களால் சிறைப்பிடிக்கப்பட்டு பௌத்த சிங்கள தேசியவாதிகளிடம் ஒப்படைக்கப்பட்ட தமிழீழ தேச-த்தை மீட்பதற்கான திட்டம் எதுவும் அவரிடம் இருக்கவில்லை. மற்றவர்களைப்போலவே அவரும் சிறீலங்கா பாராளுமன்ற நாற்காலிக்கான ஓட்டப் போட்டியில் பங்கு பற்றுவதன் மூலம் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கலாம் என்று நம்பும் ஒருவராகவே இருந்தார்.

டி.எஸ்.சேனநாயக்கா அரசாங்கம் மலையக மக்களின் வாக்குரிமையைப் பறித்ததற்கு எதிராக, அச்சட்டத்தை எதிர்த்து வாக்களித்ததற்கு அப்பால் தமிழரசுக் கட்சி எந்தவிதமான எதிர்ப்புப் போராட்டத்தையும் நடத்தவில்லை.

1948—49 குடியுரிமைச் சட்டங்களின்படி, 1951 ஆகஸ்ட் மாதம் 5ம் திகதி வரை மலையகத் தமிழர்கள் இலங்கைக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டது. 1950-ம் ஆண்டிலேயே சௌ. தொண்டைமான் தலைமையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்று பெயர் மாற்றப்பட்ட இலங்கை இந்தியன் காங்கிரஸ் அதை பகிஸ்கரிக்கும்படி கோரிக்கை விடுத்தது. பின்னர் இ. தொ. கா. மிகக் குறுகிய காலத்தில் அப் பகிஸ்கரிப்பை கைவிட்டபோது தோட்டத் தொழிலாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளானார்கள். அதாவது குடியுரிமை கோருவதற்கான விண்ணப்பப் படிவங்களில் கேட்கப்பட்டிருந்த ஆவணங்

# தோட்டத்தை விற்று வழக்காடிய தொண்டைமான்



களை மிகக் குறுகிய காலத்தில் தோட்டத்தொழிலாளர்களால் சமர்ப்பிக்க முடியாமல் போய் விட்டது.

ஆனாலும் 1951-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5-ம் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு இலட்சத்து முப்பத்தியேழாயிரத்து முப்பத்திநாலு விண்ணப்பங்களில், எட்டு இலட்சத்து இருபத்தைந்து பேர் இலங்கைக் குடியுரிமை கோரி விண்ணப்பித்திருந்தனர். (ஒரு குடும்பத்திற்கு ஒரு விண்ணப்பம்.)

இதற்கிடையில் 1950-ம் ஆண்டு மலையகத்திலுள்ள 'உருள வள்ளித்தோட்டத்திலிருந்து தமிழ் தோட்டத் தொழிலாளர்களை வெளியேற்றிவிட்டு அத் தோட்டக்காணியை சிங்களக் குடியேற்ற வாசிகளுக்கு பங்கிட்டுக் கொடுக்க டிஎஸ்.சேனநாயக்கா அரசாங்கம் முயன்றது.

இதை எதிர்த்து முதலில் இ. தொ. காங்கிரஸ் தலைமையில் உருள வள்ளித் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். படிப்படியாக இப் போராட்டம் மற்றைய தோட்டங்களுக்கும் வியாபித்தது.

இ.தொ. காங்கிரஸ், டிஎஸ். சேனநாயக்கா அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை எதிர்த்து மேல் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது. ஆனால், அந்த நீதிமன்றம் அரசாங்கத்தின் சார்பாகவே தீர்ப்பு வழங்கியது. இ.தொ.காங்கிரஸ் அத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாது பிரித்தானிய நீதி அமைப்பான 'பிரிவி கவுன்சிலுக்கு' மேல் முறையீடு செய்தது. பிரிவி கவுன்சில் உருள வள்ளித் தோட்டத் தொழிலாளர்களை அங்கிருந்து வெளியேற்றத் தடைவிதித்தது.

இந்த வழக்கிற்கும் அதையொட்டிய போராட்டங்களுக்கும் மிக அதிக பணம் செலவாகியது. இந்தச் செலவின் பெரும் பகுதியை இ.தொ.கா. தலைவர் தொண்டைமானே ஏற்றுக்கொண்டார். அதற்காக அவர் தனக்குச் சொந்தமான தோட்டம் ஒன்றையும் விற்றார். இது தோட்டத் தொழிலாளர்கள் தொண்டைமானை ஒப்பாரும் மிக்காருமில்லாத தனிப் பெரும் தலைவராக ஏற்றுக்கொள்ளும் நிலையை தோற்றுவித்தது.

**வழக்கிற்கும் அதையொட்டிய போராட்டங்களுக்கும் மிக அதிக பணம் செலவாகியது. இந்தச் செலவின் பெரும் பகுதியை இ.தொ.கா. தலைவர் தொண்டைமானே ஏற்றுக்கொண்டார். அதற்காக அவர் தனக்குச் சொந்தமான தோட்டம் ஒன்றையும் விற்றார்.**

1950ம் ஆண்டுகளில் ஐ. தே. கட்சிக்குள்ளும் பிளவு ஏற்பட ஆரம்பித்தது. பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா, தனக்குப் பின் தன் மகன் டட்லி சேனநாயக்காவே பிரதமர் பதவிக்கு வர வேண்டும் என்று விரும்பினார். இதற்காக எழுதப்படாத ஒப்பந்தம் ஒன்றையும் அப்போதைய



இலங்கையின் மகா தேசாதிபதியாக இருந்த சோல்பரி பிரபுவுடன் செய்து கொண்டதாக சொல்லப்படுகிறது.

ஆனால் டிஎஸ்.சேனநாயக்காவின் இந்த வாரிசுக் கனவுக்குப் போட்டியாக இலங்கையின் புகழ் பெற்ற பிரபுத்துவக் குடும்பம் ஒன்றில் திருமணம் செய்து கொண்டவரும்- இங்கிலாந்து ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் உயர் கல்விகற்றவருமான S.W.R.D. பண்டாரநாயக்கா இருந்து வந்தார். இயல்பாகவே டி. எஸ். சேனநாயக்காவுக்குப் பின் S. W. R. D. பண்டாரநாயக்காவே ஐ. தே. கட்சியின் தலைவராகவும் பிரதமராகவும் வரவேண்டிய நிலை இருந்தது. ஆனால் டி. எஸ். சேனநாயக்கா பண்டார நாயக்காவுக்கு போட்டியாக ஐ.தே. கட்சிக்குள் தன்னுடைய மருமகனான சேர். ஜோன். கொத்தலாவலையை வளர்த்து விட்டார். இதனால் வெறுப்படைந்து போன பண்டாரநாயக்கா, ஐ. தே. கட்சியை விட்டு வெளியேறிச் சென்று 1951ம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கினார். அப்போதிருந்த சிங்களத் தலைவர்களில் மிகவும் திறமை படைத்த ஒருவராக இருந்த S.W.R.D.பண்டாரநாயக்கா பௌத்த சிங்கள தேசியவாதம், சிங்களத் தேசிய உடை, தேசிய நலன் சம்பந்தமான பேச்சுக்கள் என்பன தனது கட்சியை வளர்த்து ஆட்சிபீடம் ஏறவைக்கும் என்பதை நன்கு தெரிந்து வைத்திருந்தார்.

**மலையக மக்களின் வாக்குரிமை பறிப்புக்கு எதிராக வாக்களித்தமை - சமஷ்டிக் கோரிக்கையை முன் வைத்தமை ஆகிய இரு அம்சங்களில் எஸ்.ஜே.வி செல்வநாயகம் அக்காலகட்டத்தில் இருந்த மற்றைய தமிழ் தலைவர்களிடம் இருந்து வேறுபட்டிருந்தாலும் - ஐரோப்பிய காலனிய ஆட்சியாளர்களால் சிறைப்பிடிக்கப்பட்டு பௌத்த சிங்கள தேசியவாதிகளிடம் ஒப்படைக்கப்பட்ட தமிழீழ தேச-த்தை மீட்பதற்கான திட்டம் எதுவும் அவரிடம் இருக்கவில்லை.**

இந்த இடத்தில் S.W.R.D.பண்டாரநாயக்காவின் குணநலன்களைப் பற்றி தெரிந்து கொள்வது, பிற்காலத்தில் அவரும், அவரது வாரிசுகளும் தோற்றுவித்த இனவாத அரசியலை புரிந்து கொள்ள வழிவகுக்கும்.

S. W. R.D. பண்டாரநாயக்கா பரம்பரை பௌத்தர் கிடையாது. அவரது முன்னோர்கள் கிறிஸ்தவ மதத்துக்கு மதம் மாறியவர்கள். அவரை 'டொனமூர் பௌத்தர்' என்று அழைப்பதுண்டு. தான் ஆங்கிலக்கல்வி கற்றுவிட்டு தன்னுடைய பிள்ளைகளை ஆங்கிலத்தில் கல்வி கற்க அனுப்பிவிட்டு (சந்திரிகா பிரெஞ்சில் படித்தாலும் தொடக்கம் ஆங்கிலமே) தான் மேற்கத்திய கலாச்சாரத்தில் மூழ்கியிருந்து கொண்டு சிங்கள மொழிக் கல்விக்கும் சிங்களக் கலாச்சாரத்துக்கும் வாதாடியவர்.

பண்டாரநாயக்காவின் சிந்தனையும் நோக்கங்களும் இவ்வாறிருக்க, டிஎஸ். சேனநாயக்காவோ அரிசியும் பருப்பும் கொடுத்தால் சிங்கள மக்களது வாக்குகளை சுலபமாக வாங்கி விடலாம் என எண்ணினார்.

அடுத்த தேர்தலில் சுலபமாக வாக்குகளை பெறுவதற்காக அவர் உணவு மானிய முறையை அதாவது இலவச அரிசி வழங்கும் முறையை அறிமுகம் செய்து வைத்தார். இரண்டாம் உலக யுத்த காலத்தில் பிரிட்டன் இலங்கைக்குச் செலுத்த வேண்டியிருந்த 'ஸ்ரேர்லிங் நிலுவை' பணம் முழுவதையும் உணவு இறக்குமதிக்கே பயன்படுத்தினார்.

இந்தப் பணத்தைக் கொண்டு கைத்தொழில்களை உருவாக்குவதற்கான இயந்திரங்கள் மற்றும் மூலப் பொருட்களை இறக்குமதி செய்திருந்தால் நாளடைவில் இலங்கை ஒரு கைத்தொழில் நாடாக உருவெடுத்திருக்கும். ஆனால் இலங்கை தொடர்ந்து தங்களது சுரண்டலுக்குரிய நவ காலனித்துவ நாடாக விளங்க வேண்டும் என்று விரும்பிய பிரித்தானிய ஆளும் வர்க்கம், மக்களுக்கு இலவசமாக உணவைக்கொடுத்து எப்போதும் இலவசத்திற்கு எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஒரு கூட்டமாக இலங்கை மக்களை மாற்றிய டி. எஸ். சேனநாயக்காவின் முயற்சிக்கு மறைமுக ஒத்துழைப்பு வழங்கியது.

**- நக்கீரன்**